இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 199 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 17 – வியாழக்கிழமை 29 பிப்ரவரி 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 199: Thiruvalluvar Year - 2055 - Maasi 17 - Thursday 29 February 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## எரிசக்தித் துறை சார்பில் ரூ. 7514.50 கோடி செலவில்

# 20 புதிய துணை மின் நிலையங்கள் : முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார் !

## 67 துணை மின் நிலையங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட 69 மின்மாற்றிகளின் செயல்பாடுகளை முதல்வர் தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 29–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், 7300 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 20 புதிய துணை மின் நிலையங்களை திறந்து வைத்து, 209 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் 67 துணை மின் நிலையங்களில் 1089 எம்.வி.ஏ அளவிற்கு திறன் மேம்படுத்தப்பட்ட 69 மின் மாற்றிகளின் செயல்பாட்டினை தொடங்கி வைத்தார். மேலும், நாகப்பட்டினத்தில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், 7300 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 20 புதிய துணை மின் நிலையங்களை திறந்து வைத்து, 209 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் 67 துணை மின் நிலையங்களில் 1089 எம்.வி.ஏ அளவிற்கு திறன் மேம்படுத்தப்பட்ட 69 மின் மாற்றிகளின் செயல்பாட்டினை தொடங்கி வைத்தார். மேலும், நாகப்பட்டினத்தில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னாக, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழிற்துறை, விவசாயம், வணிகம், தகவல் தொழில்நுட்ப மையங்கள், மெட்ரோ இரயில் திட்டங்கள், மின்சார வாகன மின்னூட்ட நிலையங்கள், 2030ல் தமிழகத்தில் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி எனும் இலக்கை எட்டுதல் ஆகியவற்றை கருத்திற் கொண்டு, வளர்ச்சிக்குத் தேவையான மின்சாரத்தை தரமாக, சீராக வழங்கிடவும், காற்று மற்றும் சூரியசக்தி மூலம் பெறப்படும் பசுமை மின்சாரத்தை முழுமையாக பயன்படுத்திடவும், புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல், துணை மின் நிலையங்களின் தரம் உயர்த்துதல், இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் புதிய விகிதாசார அறிமுகம், ஆளில்லா துணை மின் நிலையத்தை ஆளுள்ள துணை மின் நிலையமாக மாற்றுதல் மற்றும் இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் கூடுதல் திறனுள்ள மின் மாற்றிகள் நிறுவுதல் போன்ற பணிகளை தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

### புதிதாக நிறுவப்பட்டுள்ள – 20 துணை மின் நிலையங்களை திறந்து வைத்தல்!

திருவள்ளூர் மாவட்டம் – இடையன்சாவடியில் 765 கி.வோ வட சென்னை தொகுப்பு வளிமகாப்பு துணை மின் நிலையம் (Gas Insulated Switchgear Substation) மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் –அரியலூரில் 765 கி.வோ துணை மின் நிலையம், என 6103 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள இரண்டு 765 கி.வோ துணை மின் நிலையங்கள்;

புதுக்கோட்டை மாவட்டம் – வெள்ளாளவிடுதியில் 909 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள ஒரு 400 கி.வோ துணை மின் நிலையம்;

சேலம் மாவட்டம் – கருப்பூர் ஜாகீர் அம்மாபாளையத்தில்

72 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள ஒரு 230 கி.வோ துணை மின் நிலையம்;

அரியலூர் மாவட்டம்– இலந்தைகூடம், சென்னை மாவட்டம் –கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகம், ஈரோடு மாவட்டம் –வில்லரசம்பட்டி, விஜயமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – பேகபள்ளி, தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டிணம் (தரம் உயர்த்துதல்), திருநாகேஸ்வரம் (தரம் உயர்த்துதல்), திருவள்ளூர் மாவட்டம் குஞ்சலம், திருமுல்லைவாயல், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கே.சாத்தனூர் (விகிதாசார அறிமுகம்) ஆகிய இடங்களில் 176 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பத்து புதிய 110 கி.வோ துணை மின் நிலையங்கள்;

அரியலூர் மாவட்டம் பெரியகருக்கை, நீலகிரி மாவட்டம் சிம்ஸ் பார்க் குன்னூர், திருவள்ளூர் மாவட்டம் – புறவழிச்சாலை பூந்தமல்லி ஆகிய இடங்களில் புதிய துணை மின் நிலையங்களும், நாகப்பட்டினம் மாவட்டம் ஆயக்காரன்புலம், வேட்டைகாரனிருப்பு, தஞ்சாவூர் மாவட்டம் – ஒட்டங்காடு ஆகிய இடங்களில் ஆளில்லா துணை மின் நிலையத்தை ஆட்களுடன் கூடிய துணை மின் நிலையமாக தரம் உயர்த்தி 38 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஆறு 33 கி.வோ துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 7300 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 20 புதிய துணை மின் நிலையங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### 67 துணை மின் நிலையங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட 69 மின் மாற்றிகளின் செயல்பாட்டினைத் தொடங்கி வைத்தல்!

செங்கல்பட்டு மாவட்டம் – வீராபுரம், புதுதாங்கல், கிட்ஸ் பார்க், மெப்ஸ், மூசிவாக்கம், சென்னை மாவட்டம் – போரூர், கோயம்புத்தூர் மாவட்டம் – ஒத்தகால்மண்டபம், மருதூர், கோயம்புத்தூர், கடலூர் மாவட்டம் – தோப்புக்கொல்லை, பெண்ணாடம், கோ.பூவனூர், திண்டுக்கல் மாவட்டம் – நத்தம், ஈரோடு மாவட்டம் – கவுந்தப்பாடி, தளவாய்பேட்டை, காந்திநகர், நல்லகவுண்டம்பாளையம், கரூர் மாவட்டம் – தாந்தோணி மலை, கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூர், மதுரை மாவட்டம் – வாலாந்தூர், எல்லீஸ் நகர், ஆனையூர், மயிலாடுதுறை மாவட்டம் – கடலங்குடி, பெரம்பலூர் மாவட்டம் – ஈச்சங்காடு, மங்கலமேடு, புதுக்கோட்டை மாவட்டம் – வடகாடு, இராமநாதபுரம் மாவட்டம்– ஆர்.எஸ்.மடை, பரமக்குடி, சேலம் மாவட்டம் – மல்லியக்கரை, தும்பல், சிவகங்கை மாவட்டம் – காரைக்குடி, தென்காசி மாவட்டம் – கீழப்பாவூர், தஞ்சாவூர் மாவட்டம் – திருக்கானூர்பட்டி, திருப்புறம்பியம், தஞ்சாவூர்;

தேனி மாவட்டம் – காமாட்சிபுரம், கடமலைகுண்டு, மார்க்கையன் கோட்டை, திருவள்ளூர் மாவட்டம் – செம்பரம்பாக்கம், எண்ணூர், அத்திப்பட்டு; திருப்பத்தூர் மாவட்டம் சோமலாபுரம், திருவண்ணாமலை மாவட்டம் – சிறுங்காட்டூர், ஆதமங்கலம், மங்கலம், மாங்கல், திருவண்ணாமலை, திருவாரூர் மாவட்டம் – திருத்துறைப்பூண்டி, தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூர், திருநெல்வேலி மாவட்டம் – மலையான்குளம், களக்காடு, புளியங்குடி, நாவலடி, திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர், ஏரிப்பாளையம், ஊத்துக்குளி, வேலூர் மாவட்டம் – பேர்ணாம்பட்டு, ஆற்காடு, விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம், வானூர், விக்கிரவாண்டி, காரணை பெரிச்சானூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு மின் தொடரைமைப்புக் கழகம் சார்பில் 202 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 63 துணை மின் நிலையங்களில் 1049 எம்.வி.ஏ அளவிற்கு கூடுதல் திறனில் 65 மின் மாற்றிகள்; செங்கல்பட்டு மாவட்டம் – ஹிரநந்தனி; சென்னை மாவட்டம் – ஈஞ்சம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம் – மாதவரம் தோல் தொழிற்பேட்டை, மேனாம்பேடு ஆகிய இடங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 துணை மின் நிலையங்களில் 40 எம்.வி.ஏ அளவிற்கு கூடுதல் திறனில் 4 மின் மாற்றிகள்;

என மொத்தம் 209 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 67 துணை மின் நிலையங்களில் 69 மின் மாற்றிகளின் செயல்பாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

### நாகப்பட்டினத்தில் கட்டப்பட்டுள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தல்!

நாகப்பட்டினம் மின் பகிர்மான வட்டத்தில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் முதல் தளத்துடன் புதிதாக கட்டப்பட்டுள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மா. இராமச்சந்திரன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் (நிதி ( விஷு மஹாஜன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இயக்குநர் (பகிர்மானம்) இரா. மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


காணொலிக் காட்சி வாயிலாக புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. முத்துராஜா, எம். சின்னதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஐ.எஸ். மெர்சி ரம்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## ஒப்பந்தத்தை மீறி பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் ஆந்திர அரசின் நடவடிக்கை

# உச்சநீதிமன்றத்தை அவமதிக்கும் தவறான முயற்சி!

## நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் கண்டனம்!



சென்னை, பிப். 29 -

**ஏற்கனவே உள்ள 1892 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறி, பாலாற்றின் குறுக்கே அணை கட்ட ஆந்திர அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கையானது, இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் உச்சநீதிமன்றத்தை அவமதிப்பதாகவும், தவறான முயற்சி என்றும் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

பாலாற்றின் குறுக்கே புதிய அணை கட்டுவதற்கு ஆந்திர அரசு அடிக்கல் நாட்டி உள்ளதாக வந்துள்ள செய்திக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் மறுப்பு அறிக்கை வருமாறு:–

பாலாறு ஒரு பன்மாநில நதி ஆகும். இது 1892 – ஆம் ஆண்டைய மதராஸ் – மைசூர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பன்மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளில் பாலாறும் ஒன்றாகும்.

1892 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தின்படி, மேற்பகுதியிலுள்ள மாநிலங்கள் கீழ்ப்பகுதியிலுள்ள மாநிலங்களின் முன் அனுமதி இல்லாமல், எந்த அணை கட்டுமானத்தையோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானத்தையோ அல்லது நீரைத் திருப்புவதற்கும், நீரைத் தேக்குவதற்கும் உரிய எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள முடியாது.

இந்த ஒப்பந்தம் படுகை சம்பந்தப்பட்ட மாநிலங்களையும் கட்டுப்படுத்தும். மேலும் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும் என 16.02.2018 அன்று உச்சநீதிமன்றம் காவிரி சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அளித்த தீர்ப்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

2018 – SCC(1) para 4.4.6.1

4.4.6.1 After coming into force of the 1947 Act, the doctrine of paramountcy has no room for application as the Government of India became the full sovereign authority. The two Agreements of 1892 and 1924 had neither any political arrangement nor touched any facet of sovereignty of India. Per contra, the Agreements cover the areas of large public interests which do not have any political element and in this backdrop, the agreements are neither inoperative nor completely extinct.

இவ்வாறு இருக்கையில் ஆந்திர அரசு தன்னிச்சையாக ஒரு புதிய அணையை கட்ட முயற்சிப்பது 1892 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறுவதாகும்.

மேலும் உச்சநீதிமன்றம் மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்கு முற்றிலும் மாறுப்பட்ட செயலாகும்.

இது ஒரு தவறான முயற்சியாகும். மேலும் இதற்கு முன் சித்தூர் மாவட்டம் கணேஷபுரத்தில் ஆந்திர அரசு தன்னிச்சையாக ஒரு அணையை கட்ட முயற்சித்த போது அச்செயலை ஆட்சேபித்து தமிழ்நாடு அரசு 10.02.2006 அன்று உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு (O.S. No. 2 of 2006) தாக்கல் செய்தது. இவ்வழக்கில் இரு மாநில சாட்சியாளர்களது குறுக்கு விசாரணை 2018 ல் முடிவடைந்தது. இவ்வழக்கின் இறுதி விசாரணை நடக்க உள்ளது.

இதற்கிடையே ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே ஏற்கெனவே அமைக்கப்பட்ட தடுப்பாணைகளின் உயரத்தை அதிகரித்து இருப்பதை எதிர்த்து மற்றும் ஒரு சிவில் வழக்கு உச்சநீதிமன்றத்தில், O.S. 3 of 2016 தொடுத்துள்ளது. இந்த வழக்கும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இவ்வாறு 2 அசல் வழக்குகளும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது தன்னிச்சையாக ஆந்திர அரசு பாலாற்றில் ஒரு புதிய அணையை கட்ட முயற்சிப்பதும், அதற்காக அதனுடைய நிதிநிலை அறிக்கையில் (Budget) பணம் ஒதுக்கியிருப்பதும் முற்றிலும் உச்சநீதிமன்றத்தை அவமதிப்பதாகத்தான் கருத வேண்டும்.

இச்செயல் இருமாநிலங்களின் நட்பிற்கு ஏற்றதல்ல. மேலும் கூட்டாட்சிக்கு எதிரானது.

ஆகையால் ஆந்திர அரசு இந்த அணை கட்டும் பிரச்சினை, உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது இம்மாதிரியான எந்த வித செயல்களையும் மேற்கொள்ள கூடாது என இருமாநிலங்களின் நலன் கருதி கேட்டுக் கொள்கிறேன்.

இவைகளை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே ஏதாவது கட்டுமானப்பணிகளைமேற்கொள்ளுமேயானல் தேவையான சட்டபூர்வமான நடவடிக்கைகளை தமிழ்நாட்டின் நலன் கருதி மேற்கொள்ளும்.

இவ்வாறு அமைச்சர் துரை முருகன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.